Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No. CC.No. 25/2021

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.5**

| | | | |
|---|---|---|---|
| Name : | காந்தி | Calling: | வியாபாரம் |
| Father's Name: | துரைசாமி | Religion: | இந்து |
| Village: | குந்தாணிமேடு | Age: | 72 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 15.11.2023

SIGN :

(1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. 2ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது.)

அசா 5 முதன்மை விசாரணை

1ம் எதிரி கோபியை தெரியும் . 2 வது எதிரி ஜெயவேலுவை தெரியாது. அசா1 ஐ தெரியும். சம்பவத்தை குறித்து எனக்கு எதுவும் தெரியாது.

சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் அனுமதி வழங்கியதின் பேரில் அதகுவி

29.06.2017ம் தேதி மாலை 05.00 மணி அளவில் நானும் காந்தியும் அவரது வீட்டின் அருகே இருந்தோம் என்றால் இல்லை. அப்போது எதிரி கோபிநாதன் அசா1 ஐ அசிங்கமான வார்தையால் திட்டி, சட்டையை பிடித்து இழுத்து வாய் மீது குத்தியதில் அவருக்கு பல் விழுந்ததா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 2 ம் எதிரி ஜெயபால் அசா1 ஐ கீழே தள்ளி காலால் மார்பு மீது எட்டி உதைத்தாரா என்றால் அதுவும் தெரியாது. 1ம் எதிரி சூரி கத்தியால் அசா 1ன் வலது பக்க நெற்றியில் கிழித்து ரத்த காயம்

ஏற்படுத்தி கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினாரா என்றால் அதுவும் எனக்கு தெரியாது. போலிசார் விசாரணையில் சம்பவத்தை நேரில் பார்த்ததாக கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனது ஊர்காரர்கள் என்பதால் அவர்களை வழக்கில் இருந்து காப்பாற்ற உண்மைக்கு புறம்பான சங்கதிகளை சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.)

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) காந்தி

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.
(Sd./–) R.S.Praganthaa,
Judicial Magistrate, Vaniyambadi.

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No. CC. No. 25 / 2021

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No. 6**

| | | | |
|---|---|---|---|
| Name: | சுந்தரமூர்த்தி | Calling: | கூலிவேலை |
| Father's Name: | முனிரத்தினம் | Religion: | இந்து |
| Village: | சின்னகொல்லகுப்பம் | Age: | 56 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 15.11.2023

| SIGN : |
|---|

(1ம் எதிரி ஆஜர், 2ம் எதிரி ஆஜரில்லை. 2ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது.)

அசா, 6 முதன்மை விசாரணை

என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பங்கள் என்னுடையது தான். சம்பவம் நடந்தது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் கேட்டுகொண்டதற்கிணங்க கையொப்பம் செய்தேன். பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பங்கள் முறையே அசாஆ 2 மற்றும் அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் அனுமதி வழங்கியதின் பேரில் அதகுவி

கடந்த 29.06.2017ம் தேதி நடந்த அடிதடி சம்பவத்திற்காக 30.06.2017ம்

தேதி மாலை 3 மணி அளவில் போலிசார் சம்பவயிடத்தை பார்த்து வரைபடம் வரைந்ததற்கு சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. அதே நாள் 17.30 மணிக்கு சம்பவத்தில் பயன்படுத்திய கத்தியை போலிசார் மகசரில் கைப்பற்றியதற்காக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. போலிசார் விசாரணையில் உண்மை சங்கதிகளை கூறிவிட்டு எதிரிகள் எனது பக்கத்து ஊர்காரர்கள் என்பதால் அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு புறம்பான சங்கதிகளை சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.)

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) சுந்தரமூர்த்தி

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.
(Sd./–) R.S.Praganthaa,
Judicial Magistrate, Vaniyambadi.